**<u>சுருக்கம்</u>**

பள்ளிக் கல்வி – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பகுதி நேர பயிற்றுநர்களின் ஊதியம் ரூ.7700/–லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை</u>**

அரசாணை (நிலை) எண்.15

நாள் 01.02.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி வருடம், தை 19

படிக்கப்பட்டது :

1. சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் கடிதம் ந.க.எண்.185/அ15/பநேப/ஒக/2021, நாள் 12.01.2021.

மீண்டும் படிக்கப்பட்டவை :

2. அரசாணை (நிலை) எண்.177, பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள் 11.11.2011.
3. அரசாணை (நிலை) எண்.186, பள்ளிக் கல்வித் (அகஇ) துறை, நாள் 18.11.2014.

*******

<u>ஆணை :–</u>

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் கருத்துருவை ஏற்று, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை மூலம் அரசுப் பள்ளிகளில் கல்விசார் (உடற்கல்வி, ஓவியம், இசை மற்றும் வாழ்க்கைக் கல்வி) இணைச் செயல்பாடுகளைப் பயிற்றுவிக்கும் பொருட்டு தோற்றுவிக்கப்பட்ட 16,549 பகுதி நேரப் பயிற்றுநர் பணியிடங்களில் தற்போது பணியில் உள்ள 12,483 பகுதி நேரப் பயிற்றுநர்கள், அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி மாணவர்களின் கல்விசார் இணைச் செயல்பாடுகளைச் சிறக்க செய்து வருவதினால், அவர்களது பணித்திறனை மேலும் மேம்படுத்தும் பொருட்டு மேற்கண்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள இதர வழிமுறைகளுடன் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இவர்களது மாத ஊதியத்தினை (மே மாதம் நீங்கலாக 11 மாதங்களுக்கு மட்டும்) ரூ.7,700/–லிருந்து ரூ.10,000/– ஆக (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) உயர்த்தி வழங்க முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

i. தற்போது பணியில் உள்ள பகுதி நேரப் பயிற்றுநர்களை தேவையுள்ள பள்ளிகளுக்கு மறுஒதுக்கீடு செய்து, இனிவரும் காலங்களில் அவர்கள் வாரத்திற்கு மூன்று முழு நாட்கள் பணிபுரிவதை உறுதி செய்ய வேண்டும்.
ii. பகுதி நேரப் பயிற்றுநர்கள் பணி புரியும் சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் வழங்கும் கால அட்டவணையின்படி இவர்கள் பள்ளிக்கு வருகை புரிந்து மாணவர்களுக்கு கல்விசார் இணைச் செயல்பாடுகள் பயிற்றுவிக்க வேண்டும்.
iii. இவர்களுக்கான வருகைப் பதிவேடு, சார்ந்த தலைமையாசிரியரால் முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

Scanned with CamScanner

iv. இவர்களது ஊதியம், வருகைப் பதிவேட்டின்படி தலைமையாசிரியர் மூலமாகவே விடுவிக்கப்பட வேண்டும்.

2. மேலே குறிப்பிட்டுள்ளவாறு, பகுதி நேர பயிற்றுநர்களுக்கான ஊதியத்தினை உயர்த்தி வழங்குவதால் ஏற்படும் செலவினத்தில், ஆண்டுதோறும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்ட ஒப்புதல் குழு (Project Approval Board) ஒப்புதல் அளிக்கும் தொகைக்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மட்டும் மாநில அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தீரஜ் குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாநில திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி (ம) பயிற்சி நிறுவனம், சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–18/35.
கருவூல மற்றும் கணக்கு ஆணையர், சென்னை –15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் (ம)
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை –9.
நிதி (கல்வி–II) துறை, சென்னை –9.
பள்ளிக் கல்வி (வரவு–செலவு)த் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 1/2/2021
01/02/2021

Scanned with CamScanner